கடலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

முன்னிலை: திரு.இரா.பூபதி., எம்.எஸ்.ஸி.,பி.எட்., எம்.ஃபில்.,

மூ.மு. எண். 8660/ அ3 / 2022 நாள். .06.2022

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப் பணி - கடலூர் மாவட்டம் - கவரப்பட்டு அரசு உயர்நிலைப் பள்ளியில் பணி நியமனம் செய்யப்பட்டு தற்போது அதே பள்ளியில் பணிபுரியும் திருமதி.இரா.சசிதேவி என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன் முறை செய்து ஆணையிடுதல் – சார்பு.

பார்வை:
1. அரசாணை எண்.101 பள்ளிக் கல்வி (வரவு/செலவு) துறை நாள். 18.05.2018
2. கடலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண். 6344/அ3/2020 நாள்.17.09.2020
3. கவரப்பட்டு,அரசு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியரின் ந.க.எண். 97/2022 நாள். 24.06.2022

---

தமிழ் நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV தேர்வு 2018 – 2019 மற்றும் 2019 – 2020 ஆண்டுகளில் தேர்வாணையம் மூலம் இளநிலை உதவியாளர் பணிக்கு தேர்வு செய்யப்பட்டு பார்வை (2)ன்படி கடலூர் மாவட்டம், கவரப்பட்டு அரசு உயர்நிலைப் பள்ளியில் பணி நியமனம் செய்யப்பட்டு தற்போது அதே பள்ளியில் பணியாற்றி வரும் கீழ்காணும் தனியருக்கு தமிழ்நாடு அமைச்சுப் பணித் தொகுப்பின் கீழ்வரும் இளநிலை உதவியாளர் பதவியினை அவரது பெயருக்கெதிரே குறிப்பிட்டுள்ள நாள் முதல் பணிவரன் முறை செய்து ஆணையிடப்படுகிறது.

அட்டவணை

| தேர்வாணைய பட்டியலின் வரிசை எண் | இளநிலை உதவியாளரின் பெயர் மற்றும் அலுவலக முகவரி | இளநிலை உதவியாளராக பணி நியமனம் பெற்ற பள்ளி/ நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 364 | இரா.சசிதேவி<br>அரசு உயர்நிலைப் பள்ளி,<br>கவரப்பட்டு. | 21.09.2020 முற்பகல்<br>அரசு உயர்நிலைப் பள்ளி,<br>கவரப்பட்டு. | 21.09.2020 முற்பகல் |

தனியர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர் மூன்று ஆண்டுகளில் இரண்டு ஆண்டுகள் தகுதிகாண் பருவத்தில் இருப்பார்.

இந்த பணிவரன்முறையானது சென்னை / சென்னை உயர்நீதிமன்றத்தில் மதுரைக் கிளையில் இந்த நியமனம் சார்ந்த நிலுவையில் உள்ள 2018 – 2019 மற்றும் 2019–2020 ஆண்டுகளில் தொகுதி IV –ன் கீழுள்ள பணிகளுக்கான நியமனம் தொடர்பான வழக்குகளின் முடிவுக்கு உட்பட்டதாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தகுதிகாண் பருவ காலத்திற்குள் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்விலும், பவானி சாகர் அடிப்படை பயிற்சியிலும் தேர்ச்சி பெற வேண்டும். பணிப்பதிவேட்டில் பணிவரன்முறை பதிவுகள் மேற்கொள்ளவும், பணிப்பதிவேடு பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதல் அனுப்பி வைத்திடவும், சார்ந்த தலைமையாசிரியருக்கு தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்,
கடலூர்
27/6/2022

இணைப்பு : தனியரது பணிப்பதிவேடு (1 தொகுதி)

பெறுதல் :

தலைமையாசிரியர்,
அரசு உயர்நிலைப் பள்ளி,
கவரப்பட்டு (இளநிலை உதவியாளருக்கு கூடுதல் நகலுடன்)

நகல் : மாவட்டக் கல்வி அலுவலர், சிதம்பரம்.